# புதிய அடையாளம்!

- சென்னைக்கு, 'சென்ட்ரல் சதுக்கம்'
- ரூ.400 கோடியில் கட்டமைப்புகள்
- 2022க்குள் பணிகள் முடிக்க திட்டம்



■ மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை அருகே பூங்கா அமைக்க உள்ள இடம்.



■ பூந்தமல்லி நெடுஞ்சாலையில், 'சென்ட்ரல் சதுக்கம்' கட்டுமானப்பணி நடக்கும் பூங்கா நகர் பகுதி.

– நமது நிருபர் –

**சென்னை, சென்ட்ரல் பகுதியை, சென்னையின் அடையாளமாக மாற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள, 'சென்ட்ரல் சதுக்கம்' அமைக்கும் பணிகள், 400 கோடி ரூபாய் செலவில் துவக்கப்பட்டுள்ளன. இப்பணிகளை, 2022க்குள் முடிக்க, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

சென்னையில், முக்கிய நிலையங்களாக, சென்னை, எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் ரயில் நிலையம், மூர் மார்க்கெட் புறநகர் மின்சார ரயில் நிலையம், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம், பூங்கா புறநகர் மின்சார ரயில் நிலையங்கள் உள்ளன.

இவைகளுக்கு அருகில், பாரம்பரியமிக்க ரிப்பன் மாளிகை, விக்டோரியா ஹால், ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை மற்றும் தெற்கு ரயில்வே தலைமையகம் ஆகியவை உள்ளன.

### தொலைநோக்கு பார்வை

இதனால், சென்னையில் மற்ற இடங்களை விட, இப்பகுதியில், வாகன போக்குவரத்தும், மக்கள் நடமாட்டமும் அதிகம் இருக்கும்.

இப்பகுதியில் உள்ள இடங்களை, சுரங்கம் வழியாகவும், சாலை வழியாகவும் இணைக்கும் வகையில், தேவையான கட்டட வசதிகள், அழகிய பூங்காக்களையும் கொண்ட, சென்ட்ரல் சதுக்கம் 400 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளது.

இதற்கான பணிகள், சமீபத்தில் துவங்கி, ஜரூராக நடக்கிறது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், சி.எம்.டி.ஏ., இணைந்து, இப்பணிகளை செய்கின்றன.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

சென்னையில், முக்கிய இடமாக திகழும் சென்ட்ரல் பகுதியை, நவீன கட்டமைப்புகளுடன் மேம்படுத்தவும், தொலைநோக்கு பார்வையுடனும், சென்ட்ரல் சதுக்கம் அமைக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள, பாரம்பரிய கட்டடங்களை தவிர, மற்ற கட்டுமானங்கள் புதுப்பித்தும், மாற்றியும் அமைக்கப்பட உள்ளன.

### வாகன நிறுத்தம்

மெட்ரோ ரயில் நிலையத்தின் மீது, வெளிநாடுகளில் இருப்பதை போல, வித்தியாசமான வடிவமைப்பில், அழகிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில், ரிப்பன் மாளிகை, விக்டோரியா ஹால், மூர் மார்க்கெட் ரயில் நிலையம், எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையம் இடையே உள்ள இடங்களில், பூந்தமல்லி நெடுஞ்சாலையை தவிர்த்து, மற்ற இடங்களில், தரைக்கு மேல், வாகன நிறுத்தம், அழகிய பூங்காக்கள், தேவையான இடங்களில், சாலைகள் அமைக்கப்பட உள்ளன.





■ சென்ட்ரல் சதுக்கம் பணி முடிந்த பின், அமைய உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையின் தோற்றம். மாதிரி படம்.

மெட்ரோ ரயிலில் வரும் பயணியர், நிலையத்தை விட்டு வெளியே செல்ல, ஆறு வழிகளில் உள்ள சுரங்கப்பாதையில், எந்த பாதையில் சென்றாலும், மேற்பகுதியில், அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு, பஸ்சில் செல்ல ஏதுவாக, பஸ் நிறுத்தம், வாகன நிறுத்தங்கள் அமையும்.

நிழல் தரும் மரங்கள், அழகிய செடிகள், நீரூற்றுகள், பளிங்கு தரைகளுடன், பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு, தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

### ஜொலிக்கும்

சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தின் மேல் பகுதியில், சென்ட்ரல் சதுக்கம் கட்டுமான பணிகள், முதல்கட்டமாக துவக்கப்பட்டுள்ளன. பணிகள் மேலும், துரிதப்படுத்தப்படும்.

ரிப்பன் மாளிகை, விக்டோரியா ஹால் எதிரில் உள்ள இடங்களில், அழகிய பூங்காக்கள் அமைக்கும் பணி துவங்கியுள்ளது.

செப்டம்பர் இறுதிக்குள், கட்டடங்களுக்கான இறுதி வடிவமைப்புகள் குறித்து, முடிவு செய்யப்படும். இத்திட்ட பணிகள், 2022க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பணிகள் முடித்து, பயன்பாட்டுக்கு வரும் போது, சென்ட்ரல் சதுக்கம் வெளிநாடுகளில் உள்ள முக்கிய இடங்களை போல், ஜொலிக்கும். சென்னையின் அடையாளமாக மாறும்.

இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## ஆசியாவில் பெரியது!

சென்னை, சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையம், சுரங்கத்தில் அமைக்கப்படும் நிலையத்தில், ஆசியாவிலேயே பெரிய நிலையம். இந்நிலையம், சுரங்கத்தில், 1,320 அடி நீளம், 132 அடி அகலம், 100 அடி ஆழத்தில் கட்டப்பட்டுள்ளது. நிலைய நடைமேடை பகுதி, 105 அடி அகலத்திலும், பயணியர் நடமாடும் மேல்பகுதி, 132 அடி அகலத்திலும் கட்டப்பட்டுள்ளது. நிலையத்திற்கு, பயணியர் வந்து செல்ல, ஆறு வழிகளில், சுரங்கப்பாதைகள் கட்டப்பட்டுள்ளன. மொத்தம், 300 கார்கள், 1,000 இருசக்கர வாகனம் நிறுத்தும் வகையில், சுரங்க வாகன நிறுத்தம் கட்டப்பட்டுள்ளது. இத்துடன், நிலையத்திற்கு மேல் பகுதியிலும், வாகன நிறுத்தம் அமைய உள்ளது.